

## ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்த

ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்த மகராஜ் துறவி, பண்டிதர்அவர்களால்திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருப்பாரய்த்துறையில் காவிரி நதியின் கரையில் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் தோற்றுவிக்கப்பட்டது. நல்லஒழுக்கத்தையும்,பாரதபண்பாட்டையும். அவற்றை பேணிக்காக்கும் ஒழுக்க சீலர்களாக மாணவிகள் உருவாக வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தோடு இந்நிறு வ ன தொடங்கப்பட்டது.ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்த மகராஜ் அவர்களால் ஈர்க்கப்பட்டு இந்நிறுவனத்தின் கீழ் 40 பள்ளிகளும் 7 கல்லூரிகளும் ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்குகின்றது.

ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரி, கரூர். ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறையால் 1987ம் ஆண்டு துவங்கப்பட்டது. தற்பொழுது இக்கல்லூரியானது ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் மேற்பார்வையில் இயங்கிகொண்டிருக்கிறது. இக்கல்லூரி பெண்களுக்கு உயர்கல்வியினை வழங்குகிறது.

## கல்லூரி :

ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரியானது கரூரிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. கரூர் - திண்டுக்கல் சாலையில் ஈசநத்தம் செல்லும் வழியில்,நகர வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு அமைதியான ஆரோக்கியமான சூழலில் கல்லூரி அமைந்துள்ளது.



## கல்லூரியின் நோக்கம் :

இக்கல்லூரி பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்,அன்னை சாரதா தேவியார்,சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் வழிநின்று - அன்பு , அறிவு, ஆற்றல் நிறைந்த பெண்கல்வியே இக்கல்லூரியின் நோக்கம்.



நாளின் தொடக்கம் காலை 9.45 மணிக்கு வழிபாட்டுடன் தொடங்குகிறது.அந்த வழிபாட்டில் இடம்பெறுவது தெய்வீக பாடல்கள். அர்ச்சனை, காயத்ரி மந்திரம், தியானம் மற்றும் தினசரி தியானம் வாசிக்கப்படுகிறது.

## இராமாயணம் மகாபாரதம் :

கல்லூரி மாணவிகளுக்கு இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் வகுப்புகள் எடுக்கப்படுகிறது. நவராத்திரி கொலு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## கல்லூரி உள்கட்டமைப்பு வசதிகள் :

நவீன வசதியுடன் கூடிய ஆய்வகங்கள் கணிப்பொறி அறிவியல், வேதியியல், இயற்பியல், நுண்ணுயிரியல் ஆகிய துறைகளில் உள்ளது.



உடற்கல்வியினை மேம்படுத்தும் விதமாக 400 மீட்ட தடகளம், மற்றும் குழுவிளையாட்டிற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் மாநில, மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் மாணவியரின் பங்கு சிறப்பாக உள்ளது.



கல்லூரி வளாகத்தில் அமைதியான சூழலும், 1000 பேர் அமரக்கூடிய கலையரங்கம், விவேகானந்தர் மண மண்டபம், வசதியோடு கூடிய காற்றோட்டமான வகுப்பறைகளும் உள்ளது.



விவேகானந்தர் மணிமண்டபம்

கல்லூரி நூலகத்தில் 10,000 த்திற்கும் மேற்பட்ட அனைத்து துறை நூல்களும், இதழ்களும் உள்ளன.



## மாணவிகளின் தனித்திறமைகள் :

கல்வி மட்டும் அல்லாமல் கருத்தரங்கம், பயிற்சிப்பட்டறை, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, நடனப்போட்டி, நாடகப்போட்டி, கோலப்போட்டி, மாறுவேடப்போட்டி, யோகா மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் மாணவிகளின் பங்கு சிறப்பாக உள்ளது.





## இதர செயல்பாடுகள் :

கீழ்காணும் செயல்பாடுகள் மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது.




1. நாட்டு நலப்பணித்திட்டம்
2. இளைஞர் செஞ்சிலுவை சங்கம்
3. செஞ்சுருள் சங்கம்
4. குடிமக்கள் நுகர்வோர் மன்றம்
5. எக்ஸ்னோரா

## விடுதி :

வெளியூர் மாணவிகள் தங்கி படிக்கும் வகையில் கல்லூரி வளாகத்திற்குள் விடுதி செயல்படுகிறது. மிகுந்த அக்கறையுடன் கூடிய கவனிப்பும், சுகாதாரமும், ஒழுக்கமும், சைவ உணவும், மற்றும் பாதுகாப்பும் விடுதியின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

